2014-2015 ஆம் நிதியாண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு புதிதாக கட்டடம் கட்டுவது பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

90—

கால்நடை மருத்துவமனை

***34480—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறிஞ்சிப்பாடி தொகுதி, வெள்ளக்கரை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வெள்ளக்கரை ஊராட்சியில் கால்நடைத் துறை விதிகளிலே குறிப்பிட்டிருக்கின்ற அளவுக்கு கால்நடைகளின் எண்ணிக்கை இல்லாத காரணத்தால், அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்மிகச் செம்மல்களிலே திலகவதியார், காரைக்கால் அம்மையார் போன்றவர்களாகவும், அன்பிலே அன்னை தெரசாவாகவும், வீரத்திலே வீரமங்கை வேலு நாச்சியாராகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களின் மொத்த உருவமாக தாயே, தாங்கள் இருப்பதால்தான் தானமும், தருமமும், தளராத தாயன்பும்*

2014 பிப்ரவரி 20]

(மேசையைத் தட்டும் ஒலி) நிலைத்து நிற்கிறது. இதனை உலகுக்கு உணர்த்தும் வகையில், நேற்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையில் அமைச்சரவை கூடி பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி, ஜெயக்குமார், ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ் ஆகியோரை விடுதலை செய்வது என எடுத்த முடிவை அறிவித்ததன்மூலம் தங்களை நாடும், நாட்டு மக்களும், நல்லவர்களும், நடுநிலையாளர்களும் போற்றுகிறார்கள், பாராட்டுகிறார்கள், நன்றி தெரிவிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்நாளில் தமிழ்த் தாயின் காலடியை நன்றியோடு வணங்குகிறேன்.

குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளக்கரை ஊராட்சி மிகப் பெரிய ஊராட்சியாகும். பக்கத்திலே இருக்கிற இராமாபுரம், வெள்ளக்கரை, கொடுக்கன்பாளையம் ஆகிய ஊராட்சிகள் அதிக மக்கள்தொகையை உள்ளடக்கி இருக்கிற பகுதியாகும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அங்கே கால்நடை மருத்துவமனை அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வெள்ளக்கரை ஊராட்சி மற்றும் அதன் அருகிலே இருக்கின்ற சில ஊராட்சிகளையும் இணைத்து, அங்கே விதிகளுக்குட்பட்டு கால்நடைகள் போதிய எண்ணிக்கையில் இருக்குமானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடும், நாட்டு மக்களும் நலம் பெற, வளம் பெற,

நாளும் உழைத்திடும் ஒப்பில்லா முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். சூழ்நிலைக்கு ஏற்ப அந்தப் பகுதியை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, கால்நடை மருத்துவமனை அமைக்க பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

91—

சமுதாய நலக் கூடம்

***22077—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, கண்ணனூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்கு சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழர்களின் உயிர் காத்து, உலகத் தமிழர்களிடத்தில் தமிழகத்தின் பெருமையை நிலைநாட்டிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வில் ஒளியேற்றிட நல்ல பல திட்டங்கள் உருவாக்கி, செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை உலகறியும். திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதி, கண்ணனூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக்